[1992 ஏப்ரல் 10

537—

சிமெண்ட் ஆலைகளிலிருந்து வெளிப்படும் புகையைத் தடுக்க மாற்று ஏற்பாடுகள் செய்தல்.

*2829— டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரியலூர் தொகுதியில் உள்ள சிமெண்ட ஆலைகளி லிருந்து வெளிப்படும் புகை அப்பகுதியில் மோசமான சுகா தாரக் கேட்டை ஏற்படுத்துவதால், வெளிப்படும் புகையினைத் தடுக்க மாற்று ஏற்பாடுகள் மூலம் சுகாதாரக் கேடுகளைத் தவிர்க்கும் முயற்சியினை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூரில் அமைந்துள்ள தமிழ்நாடு சிமென்ட் கார்ப்பரேஷன், கிரஷர், ராமில் அடுப்புகள், சிமென்ட் ஆலை மற்றும் மூட்டை கட்டும் பிரிவு ஆகியவற்றை அமைத்துள்ளது. இந்த மாசுத் தடுப்புச் சாதனங்கள் குறைந்த திறனுடன் இயங்கிவருவதால், அப்பகுதியில் தூசுக் கழிவுகள் ஏற்படுகின்றன. மாசுக் கட்டுப்பாடு சாதனங்கள், அதனுடைய செயல்முறைகள் உயர்த்தப்பட்டு சரிவர இயக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தை அந்த நிறுவனத்திற்கு இந்நிறுவனம் அறிவுறுத்தி இருக்கிறது.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா சிமெண்ட் ஆலைகளும் முறையாக பொருத்தப்பட்டு முழுமையாக செயல்பட்டு வர வில்லை என்று அமைச்சர் அவர்களே தெரிவிக்கிறார்கள். எனது தொகுதியில் 5 சிமெண்ட் ஆலைகள் உள்ளன. அவற்றில் Electrostatic Precipitator முழுமையாக பொருத்தப்படாமல், தொழிற்சாலையைச் சுற்றியுள்ள தாவரங்களில் கூட சிமெண்ட் படிந்து உள்ள நிலையை அரசு அறியுமா? ஆம் எனில், அதைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன். அடுத்து, Electrostatic Precipitator—Volume sensitive as well as power sensitive என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, power fluctuation அல்லது சிறிய பவர் கட் ஏற்பட்டாலே இந்த பிராசசில் Reconstructing Process பாதிக்கப்படும். ஆகவே, இதைக் கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

1992 ஏப்ரல் 10]

__மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாடு வாரியம் இதைக் கவனித்து வருகிறது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திலே கேட்ட போது, இந்த நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த மாசைக் கட்டுப்படுத்துவதற்காக வைக்கப்பட்டு இருக்கிற சாதனங்கள் முறையாக இயங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் அறிவுறுத்தியிருப்பதாக எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். மேலும், இங்கே பவர் கட்டைப் பற்றித் தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட நிலை வருகிறபோது, தொடர்ந்து அவைகள் இயங்குவதற்காக, அவர்கள் ஜெனரேட்டர்களைப் பயன்படுத்த வேண்டும் என்று நாம் வலியுறுத்தலாம். எனவே, இதைத் தடுத்து நிறுத்துவதற்கு, முறைப்படி அதைச் செயல்படுத்த வைப்பதற்கு அந்த நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்படும்.

__டாக்டர் சு. மணிமேகலை:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. ஆனால் இந்த Electrcstatic Precipitator முறையாகப் பயன்படுத்தப் படுகிறதா என்பதைக் கவனிக்க தனிக் குழு அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

__மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கனவே வாரியமே அதற்காகத்தான் இருக்கிறது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் என்று அதற்காக அமைத்து, நாடு முழுவதும் இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தடுப்பதற்காக அந்த வாரியம் இயங்கிக் கொண்டு இருக்கிறது, அநேகமாக இந்தியத் துணைக் கண்டத்திலேயே இந்த வாரியம் தான் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்று கூட தெரிவிக்கிறார்கள். எனவே, உரிய நடவடிக்கையை அவர்களே எடுத்து விடுவார்கள்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

__டாக்டர் ச. ஆரோக்கியசாமி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால், அங்கே இருக்கிற தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் புகையினைத் தடுப்பதற்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஒன்று செயல்படுவதாகவே தெரியவில்லை. எங்கே போனாலும் மிகுந்த சுகாதாரக் கேடுகளை விளைவித்து வருகின்ற அந்தத் தொழிற்சாலைகளுக்கு உரிய அந்தத் தடுப்புகளைச் செய்வதற்கு நம்முடைய மாசுக் கட்டுப்பாடு வாரியம் இன்னும் முடுக்கி விடப்பட வேண்டிய

சூழ்நிலைதான் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு என்று தனியாக வேறு குழுக்களை அமைத்தால், நலமாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாடு வாரியம் இயங்குவதே தெரியவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர், அது இயங்குவது எப்படித் தெரிய வேண்டும் என்று எங்களுக்குத் தெரிவிக்கிறார்கள் என்று தெரியவில்லை. இந்த வாரியம் 1982-லேதான் உருவாக்கப்பட்டது. அதிலேயிருந்து மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. ஆனால், இந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் அதற்கு முன்னாலேயிருந்து இயங்கிக் கொண்டு இருக்கிற தொழிற்சாலைகள். எனவே, தொழிலாளர்களைப் பற்றி கேள்வி வருகிறபோது, மாசுக் கட்டுப்பாடு வாரியம் அதைத் தடுத்து நிறுத்திவிட்ட காரணத்தால், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று நீங்களே கூட கேட்கிறீர்கள். எனவேதான் அந்த வாரியம் இந்தக் காரியங்களைச் செய்கிறபோது, நிதானமாகவும், அதே நேரத்திலே இந்த மாசுகளை எல்லாம் தடுக்கின்ற வகையிலே, நடவடிக்கையைத் தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, எந்தத் தொழிற்சாலையும் பாதிக்கப்படாமல், அங்கே இருக்கிற தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற வகையிலேயும். பொதுமக்களுக்கும் இடையூறு இல்லாமல். இந்த மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிச்சயமாக நல்ல காரியத்தைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 501, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

501—

மலைவாழ் மக்கள் அனுபவிக்கும் நிலங்களை அவர்களுக்கே மீண்டும் அளித்தல்.

*4028—திரு. சி. இராமசுவாமி :

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்வராயன் மலைப் பகுதியில் வாழும் மலைவாழ் மக்கள் மீது வனத்துறையினர் வழக்குகள் போட்டு அவர்கள் அனுபவிக்கும் நிலங்களில் இருந்து அவர்களை வெளியேற்றும் முயற்சிகள் நடைப்பட்டதை அரசு அறியுமா?